MCOP.No. 265/22
Date : 07.03.2026
Rw – 1
பெயர்: மாணிக்கம்
த/பெ: காந்தி

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆக்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் நிறுவனத்தில் அனைத்து வகையான வாகனங்களுக்கும் காப்பீடு செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளோம். 18.12.2021 தேதியில் நடைபெற்ற சாலை விபத்து சம்மந்தமாக தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் எதிர்மனுதாரர் மீது எங்களுடைய நிறுவனத்தில் இருந்து கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் 16.10.2025 தேதியில் முதல் தகவல் அறிக்கை கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 2023ம் வருடத்தில் தாவா விபத்து சம்மந்தமாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 2023ம் வருடத்தில் நாங்கள் புகார் கொடுத்திருந்தால் அதன் தொடர்ச்சியாக அந்த வருடத்திலேயே வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னாலும் அப்போது புகார் கொடுக்காததால் தான் 2023ம் வருடத்தில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வாகன உரிமையாளரின் பெயரை குறிப்பிட்டு நாங்கள் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் போலியான காப்புறுதி சான்றிதழை தயாரித்து தாக்கல் செய்திருககும் பட்சத்தில் அவருடைய பெயரை எங்களுடைய புகாரில் குறிப்பிட்டு கூறியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3 சான்றாவணம் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தொடர்விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் எந்த ஒரு நபரையும் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காகவே எ.ம.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கைக்கு விபரம் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பாதிக்கப்பட்ட நபருக்கு எங்களுடைய காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– மாணிக்கம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.